**SC No.55/2022**

அ.சா.2

பெயர்: ஸ்ரீ பிரதீஷ், த.பெ. மோகன்குமார்.

தேதி : 28.10.2025

**Accused absent u/s.317 Crpc petition filed and allowed.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

ரஷீத் இறந்து போன விசியம் எனக்கு அண்ணன் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான் . சம்பவம் நடந்த அடுத்த நாள் காலை என் அண்ணன் என்னிடம் சொன்னார். நானும் ரஷீத் மற்றும் திலிப் ஆகியோர் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் கிடையாது என்றால் சரியல்ல , நாங்கள் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் தான் . நாங்கள் நான்கு பேரும் ஒரே வண்டியில் போனதாக போலீஸ் விசாரணை சொல்லி இருக்கிறேனா என்று சொன்னால் சொல்லி இருக்கிறேன். ஆறுமுகம் என்பவரின் அப்பா பெயர் தெரியாது என்று சொன்னால் ஆறுமுகம் Land Owner என்ற விவரம் தெரியும் அவர் அப்பா பெயர் தெரியாது. போலீஸ் விசாரணையில் ஆறுமுகத்தின் அப்பா பெயர் ஏதும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆறுமுகத்தை நான் அவருடைய நிலத்தில் வேலை செய்யும்போது பார்த்தேன் . சம்பவம் நடந்தபோது நான் ஆறுமுகத்தை பார்க்கவில்லை என்று சொன்னால் ஆறுமுகம் இங்கே உட்காராதே என்று சொன்னார் . சராசரியான ஒரு மனிதன் இன்னொரு நபருக்கு பிரச்சனை என்றால் அவரை காப்பாற்ற முயற்சி செய்வார் என்றால் சரிதான் . சராசரியாக ஒரு மனிதனுக்கு பிரச்சனை என்றால் சம்பந்தப்பட்ட நபரின் குடும்பத்தினருக்கும் , காவல் நிலையத்திற்கும் தகவல் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் ரஷீத்தின் குடும்பத்தினருக்கோ, காவல் நிலலையத்திற்கோ எந்த

புகாரோ , தகவலோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான் . சம்பவத்திற்கு முன்பாக எங்கள் நான்கு பேருக்குள் எந்த கருத்துவேறுபாடும் இல்லை என்றால் சரிதான். நான் சம்பவத்தின் போது சம்பவ இடத்திலே இல்லை என்றும் , முதல் விசாரணையில் சம்பவத்தின்போது சம்பவ இடத்தில் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் அது தவறு . நான் சம்பவத்தின் போது அந்த இடத்தில் இருந்தேன் . போலீசார் சொல்லிக்கொடுத்தன்பேரில் தான் நான் கு.வி.மு.ச.164 வாக்குமூலம் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் அங்கு என்ன நடந்ததோ அதை வாக்குமூலமாக கொடுத்துள்ளேன்.

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2025.10.30 09:56:17 +0530